# <u>செய்தி வெளியீடு</u>

செய்தி வெளியீடு எண்.81/2023 நாள் : 12.10.2023

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (12.10.2023) சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.65.65 இலட்சம் மதிப்பீட்டில் 2 ஆயிரத்து 149 தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்கினார்கள்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (12.10.2023) கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்திற்கு அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.65.65 இலட்சம் மதிப்பீட்டில் 2 ஆயிரத்து 149 தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பேசியதாவது;-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணிகளை மேற்கொள்ளும்போது உயிரிழப்புகளை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும் என 22.05.2023 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்தார்கள். மேலும், தமிழ்நாடு மனித கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும்

அவர்களது மறுவாழ்வு விதிகள், 2022-ன்படி அனைத்து தூய்மைப் பணியாளர்களும் உரிய பாதுகாப்பு கவசங்களைக் கொண்டே பணிகள் மேற்கொள்வதை உறுதி செய்திட வேண்டும் என அறிவுறுத்தினார்கள். அதனடிப்படையில், இன்று (12.10.2023) சென்னை குடிநீர் வாரியத்தில் பணியாற்றிவரும் 2149 தூய்மைப் பணியாளர்களுக்கு (வாரிய பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தப் பணியாளர்கள்) ரூ.65.65 இலட்சம் மதிப்பீட்டில் பிரதிபலிப்பு ஆடை, கண் கண்ணாடி, முழுக்கால் மற்றும் அரைக்கால் கம்பூட்ஸ், தலைகவசம், கையுறை மற்றும் முகக்கவசம் ஆகிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தூய்மைப் பணியாளர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 28.08.2023 அன்று DICCI அமைப்புடன் இணைந்து சென்னை குடிநீர் வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் தூய்மைப் பணியில் ஈடுபடுபவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் பொருட்டு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தூய்மைப் பணியாளர்கள் நவீன இயந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்தி தொழில் முனைவோர்களாக மாற்றி கழிவு நீரகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தூய்மைப் பணிகள் மேற்கொள்ளும்பொழுது ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்கும் பொருட்டு முறையான வழிகாட்டு

நெறிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மட்டுமே, தூய்மைப் பணிகள் மேற்கௌள்ளப்பட வேண்டுமென அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களது பொறுப்புகளை உணர்ந்து தங்களது வீடுகள், அலுவலகங்களில், உரிய அனுமதியைப் பெற்று முறையான பயிற்சி பெற்ற தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு பாதுகாப்பு உபகரணங்களோடு இயந்திரங்கள் மூலம் கழிவுநீரகற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் கழிவுநீர்த் தொட்டிகள்/இயந்திர நுழைவாயில்களில் தூய்மைப் பணியாளர்கள் இறங்கி பணி செய்யக்கூடாது. இதனை மீறி தூய்மைப் பணியாளர்களை பணியமர்த்தினால் தனி நபர்/நிறுவனங்கள் மீது உரிய சட்ட விதிகளின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், வீடுகள், அலுவலகங்கள், நிறுவனங்கள், மருத்துவ-மனைகள், உணவகங்கள், திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகளில் கழிவுநீரகற்றும் பணிகள் மேற்கொள்வதற்கு 14420 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு அரசின் உரிமம் பெற்ற வாகனங்களுக்கு உரிய கட்டணங்களை செலுத்தி கழிவுநீரகற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கழிவுநீரகற்றும் பணிகள் தொடர்பாகவும் அரசின் விதிகளை மீறி கழிவுநீரகற்றும் பணிகள் மேற்கொண்டால் 14420 என்ற கட்டணமில்லா தொலைபேசிக்கு புகார்கள் தெரிவிக்கலாம். grfocmwssb@gmail.com என்ற முகவரிக்கு புகார்களை மின் அஞ்சல் செய்யலாம்.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில், அனைத்து துய்மைப் பணியாளர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. மேலும், தூய்மைப் பணிகள் மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தூய்மைப் பணியாளர்களை தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கையை சென்னை குடிநீர் வாரியம் எடுத்து வருகிறது. தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் மூலம் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டு பயிற்சி, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி கடன் திட்டம் போன்றவை வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், தூய்மைப் பணியாளர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டினை உறுதி செய்வதற்காக தூய்மைப் பணியாளர் மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்படும். மேலும், இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.கே.மோகன், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன்,இ.ஆ.ப., நிலைக்குழு தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு, மண்டலக்

குழுத்தலைவர் திரு.கு.பி.ஜெயின், 101-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.விட்டல்டா கோவிந்தராஜ், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் திரு.எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் திரு.இரா.சிவமுருகன், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்